بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 08/11/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

❖ தஹ்ரீகே ஜதீதின் 90 ஆவது ஆண்டில் ஜமாஅத் மக்கள் தரப்பிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட பொருள் தியாகங்கள் பற்றிய குறிப்பு

❖ 91 ஆவது ஆண்டின் துவக்கம் பற்றிய அறிவிப்பு

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۳﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿۴﴾

إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿۵﴾ اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿۷﴾

اَلَّذِيۡنَ يُنۡفِقُوۡنَ اَمۡوَالَهُمۡ بِالَّيۡلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمۡ اَجۡرُهُمۡ عِنۡدَ رَبِّهِمۡ ۚ وَلَا خَوۡفٌ عَلَيۡهِمۡ وَلَا هُمۡ يَحۡزَنُوۡنَ ﴿۲۷۵﴾

பொருள்: தங்களுடைய செல்வங்களை இரவிலும், பகலிலும், மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் (இறைவழியில்) செலவு செய்பவர்களுக்கு, அவர்களின் இறைவனிடம் அவர்களுக்குரிய கூலி உள்ளது. அவர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை; அவர்கள் கவலையடையவும் மாட்டார்கள். (அல் பகரா: 275)

அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத் அல்லாஹ்வின் இந்தக் கட்டளைப்படி, பொருள் தியாகத்தில் மிகவும் அதிகமாகத் தன்னை சமர்ப்பிக்கக்கூடியதாகும். ஜமாஅத்தின் பல்வேறு சந்தாக்கள் உள்ளன. கட்டாயச் சந்தாக்கள் இருக்கின்றன. ஆம் சந்தா, வஸிய்யத் சந்தா முதலியவை. பிறகு தஹ்ரீகே ஜதீத், வக்ஃபே ஜதீத் முதலிய திட்டங்கள் உள்ளன. ஒவ்வோர் இடத்திலும் எங்கு தேவை ஏற்பட்டாலும், அஹ்மதிய்யா ஜமாஅத் மக்கள் கலப்பற்றதன்மை மற்றும் நன்றியுணர்வுடன் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு பொருள் தியாகங்களில் பங்கெடுக்கிறார்கள். அவர்களுக்கு ஏதும் நிதி நெருக்கடி ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் இல்லாமல், மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் தியாகம் செய்து வருகிறார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தில் பெரும்பான்மையோ குறைவான வருவாயை உடைய, நடுத்தரமாக சம்பாதிக்கக்கூடியவர்களை உள்ளடக்கியது. ஆனால், அசாதாரணமான தியாகங்கள் செய்யக்கூடிய மக்களும் இருக்கிறார்கள். அவர்கள், ‘ஜமாஅத் இவ்வளவு திட்டங்களை ஆரம்பித்து வைத்திருக்கிறதே! எங்களது வருமானம் ஒரு வரையறைக்குள்ளேயே இருக்கிறது; எங்கிருந்து கொடுப்போம்’ என்று ஒருபோதும் வெளிப்படுத்திக் கொள்வதில்லை. மாறாக, ஓர் உள்ளத்து உத்வேகம் மற்றும் உணர்வுடன் இந்தத் தியாகங்களை செய்கிறார்கள்.

எனக்குத் தெரியும்! சில மக்கள் எத்தகையவர்கள் என்றால், அவர்கள் மிகப் பெரும் தியாகம் செய்த பிறகும், மாறாக, இப்படிச் சொல்ல வேண்டும்: தமது வயிற்றைக் குறைத்துக் கொண்டு, தமது உணவைக் குறைத்துக் கொண்டு, தம்முடைய பிள்ளைகளின் செலவுகளைக் குறைத்துக் கொண்டு இந்தத் தியாகங்களை செய்கிறார்கள். பிறகும், 'இவை எங்களுடைய தியாகங்கள் ஆகும்! ஏன் எங்கள் மீது இவ்வளவு சுமை சுமத்தப்படுகிறது? இன்ன நோக்கத்திற்காக எங்களுக்கும் தேவை இருக்கிறது' என்ற சிந்தனையே அவர்களுக்கு ஒருபோதும் வந்ததில்லை. அல்லது அவர்கள் ஒருபோதும் இவ்வாறு கூறியதில்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் தஹ்ரீகே ஜதீத் திட்டத்தைத் துவங்கிய போது, அன்னார் எளிய வாழ்வை வாழக் கோரினார்கள். அன்னார், 'எளிமையாக வாழ்ந்து உங்களது பணத்தை சேர்த்திடுங்கள். அதற்கு ஏற்ப செலவு செய்யுங்கள்' என்று கூறினார்கள். இதன் விளைவாக சில மக்கள் எத்தகையோர் என்றால், அவர்கள் தாம் எளியதிலும் எளிய வாழ்வை வாழ்ந்து, பெரும் பெரும் தொகையைக் கொடுக்கிறார்கள். வெளிப்படையாக அவர்களது நிலையைப் பார்க்கும் போது, அவர்களால் இவ்வளவு பெரிய தொகையைக் கொடுக்க முடியாது எனத் தோன்றுகிறது. ஆனால், ஆயிரக்கணக்கான டாலர்களில் அல்லது ஆயிரக்கணக்கான பவுண்டுகளில் அல்லது ஆயிரக்கணக்கான யூரோக்களில் தியாகங்கள் செய்து கொண்டிருப்பார்கள்.

இந்த பௌதிக உலகில், இந்த நாடுகளில் வாழ்ந்து கொண்டு, இவ்வளவு தியாகங்கள் செய்வது மிகப் பெரிய விஷயம் ஆகும். எவை ஏழை நாடுகளாக இருக்கின்றனவோ, பாக்கிஸ்தான் இருக்கிறது, இந்தியா இருக்கிறது அல்லது ஆப்பிரிக்க நாடுகள் இருக்கின்றன. அங்கோ அஹ்மதிகளின் வழிவகைகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. மிகவும் சிரமப்பட்டுதான் மக்கள் வாழ்க்கையைக் கழிக்கிறார்கள். பிறகும் தியாகங்கள் செய்து கொண்டே செல்கிறார்கள். அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் செலவு செய்கிறார்கள். எனவே, இவர்கள்தான் உண்மையான நம்பிக்கையாளர்கள் ஆவார்கள். அல்லாஹ்வின் விருப்பத்தைக் பெறக்கூடியவர்கள் ஆவார்கள். சில மக்கள் எத்தகையவர்கள் என்றால், எப்பொழுதும் எந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டாலும் சரி அல்லது தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீதுக்கான அறிவிப்பு செய்யப்படும்போதும், கடன் வாங்கியும்கூட தொகையை செலுத்தி விடுகிறார்கள். ஆனால், கடன் வாங்கிக் கொடுப்பது கட்டாயம் இல்லை. அவர்களுக்கு எந்த அச்சமும் இருப்பதில்லை. 'அல்லாஹ்வின் வழியில் செலவு செய்கிறோம்; எனவே, அல்லாஹ்வே! பூர்த்தியும் செய்து விடுவான்' என்று அவர்களுக்குத் தெரியும்.

எனவே, மேலான அல்லாஹ் அஹ்மதிய்யா ஜமாஅத்துக்கு மிகப் பெரும் பெரும் தியாகம் செய்யக்கூடியவர்களை வழங்கியுள்ளான். அந்நியர்களைப் போன்று, 5 ரூபாய், 10 ரூபாய் கொடுத்து விட்டு, பிறகு 100 முறை பள்ளிவாசலில் அறிவிப்பு செய்ய வைப்பதில்லை. எத்தகைய பல சம்பவங்கள் எனக்கு முன்னால் வருகின்றன என்றால், அங்கு மக்கள் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு தியாகங்கள் செய்வதற்காகத் தம்மை சமர்ப்பிக்கிறார்கள். அதில் ஆப்பிரிக்க நாடுகளும் உள்ளன. ஐரோப்பிய நாடுகளும் உள்ளன. ஆசிய நாடுகளும் உள்ளன. ஏழை மக்களோ மிகப் பெரும் தியாகம் செய்து சந்தா கொடுக்கிறார்கள். அவர்களுடைய தியாகங்கள் வெளிப்படையில், பொருள் அடிப்படையில், தொகை அடிப்படையில் மிகவும் சிறியவையாக இருக்கும். ஆனால், எடை அடிப்படையில் அல்லாஹ்வின் பார்வையில் மிகப் பெரும் தியாகங்கள் ஆகும். 'பொருள் தியாகங்கள் செய்வதனால், அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதுடன் சேர்த்து, மேலான அல்லாஹ் அவர்களை எல்லா விதமான அச்சங்களிலிருந்தும் விலக்கி வைக்கிறான்; அவர்களுடைய தேவைகளையும் நிறைவேற்றுகிறான்' என்ற இந்த ஆன்மா தொலை தூரத்தில் வாழக்கூடிய ஏழை நாடுகளின் மக்களிடமும் உள்ளது.

உதாரணமாக, ஜெர்மனியின் ரோட்காவ் ஜமாஅத்தின் சத்ர் சாஹிப் கூறுகிறார்கள்: வாழ்வை அர்ப்பணித்தவர்கள் சிலர் தங்களது ஒரு மாதத்திற்கான Allowance ஐ ஜமாஅத்திற்கு வழங்குவதாக அறிவித்தார்கள். இந்த விஷயம் மற்ற மக்களையும் பெரும் தியாகங்கள் செய்வதன் பக்கம் ஈர்த்தது. ஒருவர் இதே திட்டத்தில் பெரிய தொகையைச் சந்தாவாகக் கொடுத்து விட்டார். அடுத்த ஆண்டு தனது வாக்குறுதியை இரண்டு மடங்கை விடவும் அதிகரித்து விட்டார். இந்தத் தியாக உணர்வு அவரது வாழ்வில் எளிமை மற்றும் போதும் என்ற மனப்பான்மையை நிறைத்து விட்டது. எதுவரை என்றால், எளிய ஆடை மற்றும் எளிய வாழ்வை மேற்கொண்டு விட்டார். செகரட்டரீ மால் கூறுகிறார்: 'அவருடைய வெளிப்படையான நிலையைப் பார்த்து அவர் இவ்வளவு பெரிய தியாகம் செய்கிறார் என்று கணிக்க முடியாது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இதனால் எனக்கு ஒரு பழைய சம்பவமும் நினைவுக்கு வந்து விட்டது. கராச்சியில் எங்கள் நண்பர் சான்றோரான ஷேக் மஜீத் சாஹிப் ஒருவர் இருந்தார். அவர் மிகப் பெரும் பெரும் பொருள் தியாகங்கள் செய்து வந்தார். தமது வீட்டுச் செலவுக்காகப் பணம் வைத்துக் கொண்டு, மற்ற எல்லாத் திட்டங்களிலும் மற்றவர்களை முந்திக் கொண்டு பங்கெடுத்து வந்தார். அவர், 'நான் செய்யும் தொழிலை ஜமாஅத்திற்காகவே செய்கிறேன்' என்றே கூறி வந்தார்.

காதியானின் வக்கீலுல் மால் எழுதுகிறார்கள்: கேரளாவின் ஒரு நபர் இருக்கிறார். அவர் கூறுகிறார்: "எனது நிலை மிகவும் மோசமானதாக இருந்தது. எந்த வேலையும் கிடைக்கவில்லை. கடைசியில் நான், வேறு எதுவும் இல்லையென்றாலும், துணி வேலையையே ஆரம்பிக்கிறேனே என்று யோசித்தேன். நடைபாதையிலேயே ஒரு மேஜை போட்டு வேலையை ஆரம்பித்து விட்டேன். முறையாக சந்தா கொடுக்க ஆரம்பித்து விட்டேன். எந்த வருமானம் வந்தாலும், அல்லாஹ்வின் அருளால் அதில் பெரும் பரக்கத் ஏற்பட்டது. இப்பொழுது நான் பெரும் பெரும் தொகைகளைச் சந்தாவில் கொடுக்கிறேன். இரண்டு மூன்று ஆண்டுகளில் தொழிலும் விருத்தி அடைந்து விட்டது. அல்லாஹ்வுக்காக நான் தியாகம் செய்தேன். முறையாக சந்தா கொடுத்து வந்தேன். அதன் விளைவாக, எனது தொழிலில் பரக்கத் ஏற்பட்டது. சூழ்நிலை காரணமாக மற்ற மக்களின் பொருளாதார நிலைமை சீர்கெட்டுக் கொண்டிருந்தது. ஆனால், எனக்கோ பலனே ஏற்பட்டுக் கொண்டே சென்றது."

இப்பொழுது இவருக்கு சொந்தமான பெரிய பெரிய கடைகள் இருக்கின்றன. எங்கு நடைபாதையில், ஒரு ஸ்டால் போட்டு வந்தார். மேஜை வைத்திருந்தார். இப்பொழுது பெரும் பெரும் கடைகள் இருக்கின்றன. Show Room உம் இருக்கிறது. அல்லாஹ்வின் அருளால் இப்பொழுது அவர் இலட்சக்கணக்கில் சந்தா கொடுக்கிறார். இந்த ஆண்டே அவர் தஹ்ரீகே ஜதீதிலும் 10 இலட்சம் ரூபாய் செலுத்தினார்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இப்பொழுது, இது ஏழை நாடுகளின் விஷயம் என்பது மட்டுமே அல்ல. ஈமானில் உறுதியாக உள்ள மக்கள் எல்லா இடங்களிலும் இந்தக் காட்சிகளைப் பார்க்கிறார்கள். எவர்கள் நல்ல நிய்யத்துடன் அல்லாஹ்வுக்காகத் தியாகம் செய்ய விரும்புகிறார்களோ; செய்கிறார்களோ அவர்கள் காட்சிகளைப் பார்க்கிறார்கள். அவர்கள் பணக்கார நாடுகளில் வாழ்பவர்களானாலும் சரி அல்லது ஏழை நாடுகளில் வாழ்பவர்களானாலும் சரி, அல்லாஹ் அவர்களுக்கு இந்தக் காட்சிகளைக் காட்டி, அவர்களது மார்க்கத்தை வலுப்படுத்துவதற்கான ஏற்பாட்டைச் செய்கிறான். அவர்களது ஈமானை வலுப்படுத்துகிறான்.

இது போன்ற எண்ணற்ற சம்பவங்கள் உள்ளன. அவற்றை அல்லாஹ் மக்களின் ஈமானை வலுபடுத்துவதற்காகக் காட்டிக் கொண்டிருக்கிறான். இதற்குப் பிறகு, இதைப் பார்த்து மற்றவர்களுக்கும் தெரிய வரும்போது, அவர்களிடமும் தியாக உணர்வு உருவாகிறது.

*இதற்குப் பிறகு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கடந்த ஆண்டின் தரவுகளைப் பற்றி கூறினார்கள். மேலும், தஹ்ரீகே ஜதீதின் புதிய ஆண்டுக்கான அறிவிப்பு செய்தார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தஹ்ரீகே ஜதீதின் 90 ஆவது ஆண்டின் புள்ளி விவரங்களை*

*எடுத்துரைத்தவாறு கூறினார்கள்:* அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்திற்கு தஹ்ரீகே ஜதீதில் 17.98 மில்லியன் பவுண்டு பொருட் தியாகம் செய்யும் நல்வாய்ப்பு கிடைத்துள்ளது. அல்ஹம்துலில்லாஹ்! இது கடந்த ஆண்டை விட 7,79,000 பவுண்ட் கூடுதலாகும்.

**ஒட்டுமெத்த வசூல் அடிப்படையில் முதல் 10 நாடுகள்** இவையாகும்: ஜெர்மனி, பிரிட்டன், அமெரிக்கா, கனடா, மத்தியக் கிழக்கு நாடுகளின் ஒரு ஜமாஅத், **இந்தியா**, ஆஸ்திரேலியா, இந்தோனேஷியா, மத்தியக் கிழக்கு நாடுகளின் ஒரு ஜமாஅத் மற்றும் கானா.

**தனி நபர் சந்தா அடிப்படையில்** அமெரிக்கா, ஸ்விட்ஸர்லாந்து, பிரிட்டன், கனடா மற்றும் ஆஸ்திரேலியா.

**(சிறப்பாகப் பணிபுரிந்த வகையில்) குறிப்பிடந்தகுந்த மற்ற ஜமாஅத்கள்:** வங்காள தேசம், நைஜீரியா, ஹாலந்து, ஆஸ்ட்ரியா, ஃபிரான்ஸ், ஸ்விட்ஸர்லாந்து, ஐயர்லாந்து மற்றும் மத்தியக் கிழக்கு நாடுகளின் ஜமாஅத்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் வங்காள தேச ஜமாஅத்துக்காக துஆவுக்காவும் வலியுறுத்தினார்கள்.*

தஹ்ரீகே ஜதீதில் கலந்து கொள்ளக்கூடியவர்களின் மொத்த எண்ணிக்கை 16,81,000 ஆகும். ஒட்டுமொத்தமாக தியாகங்கள் செய்யக்கூடியவர்களின் எண்ணிக்கையில், கடந்த ஆண்டைவிட 50,000 அதிகரித்துள்ளது. **அதிகரித்ததில் குறிப்பிடத்தகுந்த நாடுகள்** இவையாகும்: நைஜீரியா, காங்கோ பராஸ்வீல், நைஜர், கேம்பியா, கோங்கோ கன்ஷாசா, கேம்ரூன், கினீ கினாக்கரீ, கினீ பஸாவ், யுகாண்டா மற்றும் சிராலியோன்.

**இந்தியாவின் பத்து மாநிலங்கள்:** கேரளா, **தமிழ்நாடு**, தெலுங்கானா, ஒடீஷா, கர்நாடகா, ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், மேற்கு வங்காளம், மகாராஷ்ட்ரா மற்றும் தில்லி.

**இந்தியாவின் முதல் பத்து ஜமாஅத்துகள்:** ஹைதராபாத், காதியான், கோழிக்கோடு, **கோயம்பத்தூர்**, மஞ்சேரீ, **மேலப்பாளையம்**, பெங்களூர், கொல்கத்தா, கேரங்க் மற்றும் கருளாயீ.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டல்களை முன்வைத்த பிறகு கூறினார்கள்:* நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஆசைகளுக்கு ஏற்ப தியாகங்களில் முன்னேறக்கூடியவர்களாக ஆவோமாக! பொருள் தியாகங்களிலும் மற்றும் நமது ஆன்மிக நிலைமைகளை மேம்படுத்திக் கொண்டே செல்லக்கூடியவர்களாகவும் இருப்போமாக! அல்லாஹ்வுடன் நமது தொடர்பை அதிகரிக்கக்கூடியவர்களாகவும் ஆவோமாக! பொருள் தியாகத்தில் மட்டுமல்லாமல், அதையும் தாண்டி, ஒவ்வொரு நிலையிலும், ஓர்

உண்மையான முஸ்லிமின் முன்மாதிரியான அந்த செயல் முன்மாதிரியை நாம் முன் வைப்பவர்களாக இருப்போமாக!

இது நடக்கும் போது, நாம் ஜமாஅத்தின் முன்னேற்றங்களையும் பார்ப்போம். முன்னரை விட அதிகமாக நாம் வெற்றிகளைப் பார்த்துக் கொண்டே செல்வோம். இன் ஷா அல்லாஹ். அல்லாஹ்வின் அருள்களைப் பார்த்துக் கொண்டே இருப்போம். எதிரிகள் தோல்வியைத் தழுபவர்களாக ஆவதைப் பார்த்துக் கொண்டே இருப்போம். நாம் அந்த நாளைப் பார்க்கும் பொருட்டு அல்லாஹ் அந்த நாளை விரைவில் கொண்டு வருவானாக!

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* பொருள் தியாகங்கள் செய்த இந்த அனைவருக்கும் அல்லாஹ் நற்கூலி வழங்குவானாக! அவர்களுடைய செல்வங்களிலும் வாழ்விலும் பரக்கத்தை ஏற்படுத்துவானாக! இனி அவர்கள் எப்பொழுதும் சிறந்ததிலும் சிறந்த முறையில் தமது வாழ்வைக் கழிப்பவர்களாக இருப்பார்களாக! தம்முடைய பிள்ளைகளால், தம்முடைய சந்ததிகளால் கண்களுக்கான குளிர்ச்சியைப் பெறுபவர்களாக ஆவார்களாக! தாமும் அல்லாஹ்வின் நெருக்கத்தில் முன்னேறிக் கொண்டே செல்லக்கூடியவர்களாக இருப்பார்களாக! அல்லாஹ் அவ்வாறே ஆகச் செய்வானாக! ஆமீன்.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மர்ஹூம் முபாரக் சாஹீ சாஹிப் அவர்களின் துணைவியார் துருக்கியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய அமீனா சக்மக் சாஹீ சாஹிபா அவர்கள் மற்றும் நார்வேயைச் சேர்ந்த மதிப்பிற்குரிய மஹ்மூத் அஹ்மத் அயாஸ் சாஹிப் அவர்கள் ஆகிய இரண்டு மர்ஹூம்களைப் பற்றிய நற்குறிப்பை எடுத்துரைத்து தொழுகைக்குப் பிறகு அவர்களுக்கு ஜனாஸா தொழ வைப்பதாக அறிவிப்பு செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃஃக்னீ)